கனம் திரு. எம். பக்தவத்சலம் : திரு. பிரம்மானந்த ரெட்டி சொல்வதற்கெல்லாம் நான் பொறுப்பல்ல. யாரைப் பார்த்து எப்போது எதற்காகச் சொன்னார்கள், பத்திரிகையிலே என்ன வந்தது என்பதைப் பற்றியெல்லாம் ஆராயவேண்டிய அவசியம் இல்லை.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : ஹிந்தி பேசாத மாநிலங்கள் விரும்புகிற வரையில் ஆங்கிலம் தொடர்ந்து ஆட்சிமொழியாக இருக்கவேண்டும் என்று இப்போது முதல் அமைச்சர் வற்புறுத்தினதாகக் கூறுகிறார்கள். இதை என் முன்கூட்டியே சொல்வதற்கு இயலவில்லை? இவ்வளவு கலவரங்கள், இறப்புகள் நடந்த பிறகு இப்போது வந்த விவேகம் முதல் அமைச்சருக்கு அப்போது ஏன் வரவில்லை ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் கருத்து எதுவாக இருந்தாலும் எனக்கு எப்போதும் ஒரு விவேகம்தான். எப்போதும் எதிர்பார்த்ததுதான், எப்போதும் வற்புறுத்தியதுதான்.

திரு. கோ. சி. மணி : மௌண்ட் ரோடிலுள்ள காதி கிராம உத்யோக் பவனில், ஹிந்து 1965-ம் வருஷம் மார்ச் மாதம் 14-ந் தேதி வெளியான விளம்பரப்படி, அங்கு காலியுள்ள உத்தியோகங்களுக்கு ஹிந்தி படித்தவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்படும் என்று சொல்லப்படுகிறது. இது அமைச்சர் அவர்களுக்கு தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இது பற்றி எனக்குத் தெரியாது.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, மாநில முதல் அமைச்சர்கள் மாநாடு டெல்லியில் கூடியபோது, இந்த மாநில அரசின் சார்பில் முதல் அமைச்சர் அதில் கலந்து கொண்டார்கள். ஆனால், அந்த மாநாடு பற்றிய விளக்க அறிக்கையை இந்த மன்றத்தில் முதல் அமைச்சர் வைக்கவில்லை. அந்த அறிக்கையை இங்கு வைக்கும் எண்ணம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மாநில முதல் அமைச்சர் மாநாட்டைக் கூட்டியவர் பிரதம மந்திரி அவர்கள். அவர்கள் அது பற்றிய அறிக்கையை பார்லிமெண்டில் சமர்ப்பித்து இருக்கிறார். ஆக, அதை இங்கே வைக்க வேண்டிய நிமித்தம் இல்லை என்றுதான் இங்கே வைக்கவில்லை.

திரு. ஆ. கு. சுப்பையா : நமது மாநிலத்தைப் பொறுத்தவரையில் மொழிக் கொள்கை எவ்வாறு இருக்கிறது என்பதை அறியலாமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஏற்கெனவே இது இங்கே விவாதிக்கப்பட்டிருக்கிறது. மேலும், வருகிற ஏப்ரல் 1-ம் தேதி இதுபற்றி விரிவாக விவாதிப்பதற்குச் சந்தர்ப்பம் ஏற்படும்.

MR. SPEAKER : As we have allotted two days for discussing the Language issue at the end of the budget session, I think hon. Members need not put further supplementaries on this question. So, I pass on to the next qupestion.

தடை உத்தரவை மீறியது

* 256 கேள்வி.—**திரு. சா. கணேசன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) குன்றக்குடி அடிகளார் என்னும் தெய்வசிகாமணி அருணசல தேசிக சுவாமிகள் 1965-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 12-ம் தேதி காலை சுமார் 10–30 மணிக்கு 144 தடையை மீறிக் குன்றக்குடியில் ஊர்வலம் வந்ததும், இந்தியை எதிர்த்துச் சொற்பொழிவாற்றியதும் அரசாங்கத் திற்குத் தெரியுமா ?

17th March 1965]

(இ) அப்படியானால் அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) The matter is under Police enquiry.

திரு. எம். தண்டாயுதபாணி : தலைவர் அவர்களே, இதைப்பற்றி செய்தித்தாளில் வெளிவந்தது தவறு, உண்மையா, இல்லையா என்பதை சர்க்கார் பரிசீலனை செய்ததா ? அது உண்மைக்கு புறம்பானது என்று தெரிந்தால் தக்க நடவடிக்கை எடுக்க சர்க்கார் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதுதான் இப்போது விசாரணையில் உள்ளது. என்ன நடந்தது என்பதைப் பற்றிப் போலீசார் விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. ஆ. கு. சுப்பையா : சம்பவத்திற்கு முன்பாகவே தடையை மீறு வார்கள் என்ற உத்தேசத்தில் யாராவது கைது செய்யப்பட்டிருக் கிறார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அப்படி முன்பாகவே கைது செய்யப்பட்டதாக என்னிடம் தகவல் இல்லை.

திரு. கே.ஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் : குன்றக்குடி அடிகளார் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர் என்பதற்காக நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்கிறார்களே, அதன் உண்மை என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : காங்கிரஸ் கட்சியை சேர்ந்தவர் என்று சொல்ல முடியாது. காங்கிரசுக்குள்ளேயே சில பேர்கள் அவருக்கு நண்பர்களாக இருக்கலாம். சில பேர்கள் ஆகாதவர்களாக இருக்கலாம். அவருடைய காங்கிரஸ் "அடிகளார் காங்கிரஸ்". தமிழ்நாடு காங்கிரஸ் என்ற பெயர் இல்லை. கனம் அங்கத்தினர் சுதந்திராக் கட்சியை சேர்ந்தவர். சுதந்திரா கட்சித் தலைவரே இந்தக் கேள்வியை கேட்டிருக்கிறார்கள். அவர் களுக்கு ஏதோ ஞானதிருஷ்டியோ என்னமோ, இந்த மந்திரி சபை கவிழ்ந்துவிட்டது என்று கூட ஊர்வலம் போட்டார்கள். அப்படி இல்லை, மந்திரி சபை உயிரோடு இருக்கிறது என்று கேட்டதற்கு பிறகு, போட் டோக்களை எல்லாம் பத்திரிகையில் பிரசுரிக்கவேண்டாம் என்று சொன்னார்கள். இதெல்லாம் விசாரணையில் இருக்கிறது.

Prevention against sea erosion

* 257 *Q.*—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Food be pleased to state the steps taken to prevent the sea erosion at Tiruchendur, Dhanushkodi, Manapad and Overi?

THE HON. SRI V. RAMAIAH : Protective works have been carried out to the value of Rs. 80,000 in Manapad village and to the value of Rs. 89,000 in Overi village. An estimate of Rs. 41,500 for providing protective works in Tiruchendur village is under consideration.

Protective Works were provided at Dhanushkodi, but such works though they withstood the rigours of the sea in September 1964, were not of avail in the face of cyclone and tidal action in December 1964.